**RIJO IAS ACADEMY**

7708631977, 7639954059

**Delhi Sultan**

| | |
|---|---|
| **அரேபியர், துருக்கியர் படையெடுப்பு**<br><br>• இஸ்லாம் மதத்தைத் தோற்றுவித்தவர் -முகமது நபி<br>• அரேபியர்கள் தான் முதன்முதலில் இஸ்லாம் மதத்தை பின்பற்றினர்<br>• இஸ்லாமியர்களை வலிமைமிக்க அரசியல் இயக்கமான மாற்றியவர்கள் - அரேபியர்களே<br>• இஸ்லாம் மதத்தை உலக சமயங்களில் ஒன்றாக மாற்றியவர்கள் - பாரசீகர்கள்<br><br>சிந்துப்படையெடுப்பு<br><br>• அரேபியர்கள் இந்தியாவின் மீது படையெடுக்கக்காரணம் - வளமான துறைமுகங்கள், கடற்கொள்ளையர்களை சிந்து மன்னர் அடக்கத்தவறியமை (உடனடிக்காரணம்)<br><br>• சிந்து மன்னர் தாகீரை முகமது பின் காசிம் ரேவார் போரில் தோற்கடித்தார். அவரது மனைவி ராணிபாய் தற்காப்புப் போரில் இறங்கினர். அது தோல்வியடையவே ஜவ்ஹர் வழக்கப்படி, தீயை மூட்டி அதில் குதித்து இறந்தனர். | Arab and Turkish Invasions<br><br>• The founder of Islam - Prophet Muhammad<br>• The Arabs were the first to follow Islam<br>• The Arabs were the ones who transformed the Muslims into a powerful political movement<br>• The Persians were the ones who transformed Islam into one of the world religions<br><br>The Invasion of Sindh<br><br>• The reasons for the Arab invasion of India: the rich ports and the failure of the Sindhi king to suppress the pirates (the immediate cause).<br><br>• Muhammad bin Qasim defeated the Sindhi king Dahir in the Battle of Rewar. His wife, Queen Ranibai, engaged in a defensive battle. When it failed, she and others, following the custom of Jauhar, lit a fire and jumped into it, thus ending their lives. |
| **முகமது கஜினி**<br>முகமது கஜினி, இந்தியா மீது 17 முறை படையெடுத்து, ஜெயபாலன், ஆனந்தபாலன் போன்ற இந்து மன்னர்களைத் தோற்கடித்து, ** பெஷாவர் (1001)**, பட்டியானா (1004), முல்தான் (1006, 1010), நாகர்கோட் (1009), கன்னோஜ் (1021), குவாலியர் (1023), மற்றும் புகழ்பெற்ற சோமநாதர் கோயில் (1025) போன்ற பல பகுதிகளைக் கைப்பற்றி, செல்வங்களைக் கொள்ளையடித்தார்; | Mahmud of Ghazni<br>Muhammad of Ghazniinvaded India 17 times, defeating Hindu kings like Jayapalan and Anandapala, and capturing many places like ** Peshawar (1001)**, Pattiana (1004), Multan (1006, 1010), Nagarkot (1009), Kannauj (1021), Gwalior (1023), and the famous Somnath Temple (1025) |

**முக்கிய வெற்றிகள் மற்றும் படையெடுப்புகள்:**

- **1001:** பெஷாவர் போரில் ஜெயபாலனைத் தோற்கடித்தார்.
- **1008:** சாச் போரில் இந்து ஷாஹி மன்னர் ஆனந்தபாலனை வென்றார்.
- **1011:** நாகர்கோட் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினார்.
- **1013:** வைஹிந்த் போரில் ஆனந்தபாலனைத் தோற்கடித்தார்.
- **1018:** மதுரா மற்றும் கன்னோஜ் மீது படையெடுத்து, சந்திரபாலன் உள்ளிட்ட மன்னர்களின் கூட்டணியை வென்றார்.
- **1021:** கன்னோஜைக் கைப்பற்றினார்.
- **1023:** குவாலியரை முற்றுகையிட்டு கைப்பற்றினார்.
- **1025:** குஜராத்தில் உள்ள புகழ்பெற்ற சோமநாதர் கோயிலைத் தாக்கி, அதன் செல்வங்களைக் கொள்ளையடித்து, கோயிலை அழித்தார்.

சோமநாதபுரம் படையெடுப்பு கி.பி.1025

- சோமநாதபுரம் சிவன் கோயில் குஜராத்தில் கத்தியவார் தீபகற்பத்தில் உள்ளது. இப்பகுதியின் மன்னர் **இராஜாபீமதேவன்** அரண்மனையை விட்டு ஓடிவிட்டான். எனவே கஜினி எளிதாக வெற்றி பெற்று இருபது லட்சம் தினார்கள் மதிப்புள்ள விலையுயர்ந்த பொருட்களை கொள்ளையடித்து திரும்பிச்சென்றதாக சர் ஹென்றி

**Major conquests and invasions:**

- **1001:** Defeated Jayapalan in the Battle of Peshawar.
- **1008:** Defeated Hindu Shahi king Anandapala in the Battle of Sach.
- **1011:** He invaded and captured Nagarkot.
- **1013:** Defeated Anandapala in the Battle of Vaihind.
- **1018:** Invaded Mathura and Kannaj, defeating an alliance of kings including Chandrabala.
- **1021:** Captured Kannauj.
- **1023:** He besieged and captured Gwalior.
- **1025:** Attacked the famous Somnath temple in Gujarat, looted its treasures, and destroyed the temple.

**The Somnath invasion, 1025 AD**

- The Somnath Shiva temple is located in the Kathiawar peninsula of Gujarat. The king of this region, Raja Bhimdev, fled from his palace. Therefore, Ghazni easily won and looted valuable goods worth twenty lakh dinars

| | |
|---|---|
| எலியட் குறிப்பிட்டுள்ளார்<br>• கஜினி பிர்தௌசி (ஷா நாமா) அல்பெருனி போன்ற கல்வியாளர்களை ஆதரித்தார். | before returning, as noted by Sir Henry Elliot.<br>• Ghazni patronized scholars such as Firdausi (Shahnameh) and Al-Biruni. |
| முகமது கோரி<br>• இந்திய மண்ணில் துருக்கிய பேரரசை உறுதியாக நிறுவியவர் - முகமது கோரி<br>• கோரி என்ற பகுதியை ஆண்டார்.<br>• 1175இல் முல்தான் மீது படையெடுத்த கோரி முகமது, அதை அதன் இஸ்மாயிலி வம்ச ஆட்சியாளரிடமிருந்து கைப்பற்றினார்.<br>• 1176ல் இந்தியா மீது படையெடுத்தார். முல்தான், உச் என்ற பகுதிகளைக் கைப்பற்றினார்.<br>• 1179ல் குஜராத்தின் சாளுக்கியர் அபு மலையில் கோரி முகமதுவுக்கு ஒரு பயங்கரத் தோல்வியைக் கொடுத்தனர் .<br>• 1191ல் முதலாம் தரெய்ன் போரில் பிரிதிவிராசனிடம் தோல்வியடைந்தார்.<br>• 1192ல் இரண்டாம் தரெய்ன் போரில் கோரியிடம் பிரிதிவிராசன் தோல்வியடைந்தார். இத்தோல்வி இந்திய வரலாற்றிலேயே முதன்முறையாக துருக்கிய முஸ்லீம் அரசுகள் இந்தியப் பகுதியில் நுழைய இரண்டாம் தரெய்ன் போர் வழிவகுத்தது.<br>• போரில் வெற்றி பெற்ற கோரி, மீண்டும் அஜ்மீரின் ஆட்சியை பிருத்விராஜிடமே ஒப்படைத்தார். பின்னர், இராஜதுரோகக் குற்றம் சாட்டி, அவரைக் கொன்றார்; தனது நம்பிக்கைக்குரிய தளபதியான குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிக்கான தனது துணை ஆட்சியாளராக நியமித்தார்.<br>• கோரியின் தளபதி பக்தியார் கில்ஜி வங்காளம், பீகார், ஆகிய பகுதிகளில் படையெடுத்தார். விக்கிரமசீலா, | **Muhammad Ghori**<br>• The one who firmly established the Turkish empire on Indian soil - Muhammad Ghori<br>• He ruled the region of Ghor.<br>• In 1175, Muhammad Ghori invaded Multan and captured it from its Ismaili dynasty ruler.<br>• He invaded India in 1176. He captured Multan and Uch.<br>• In 1179, the Chalukyas of Gujarat inflicted a crushing defeat on Muhammad Ghori at Mount Abu.<br>• In 1191, he was defeated by Prithviraj in the First Battle of Tarain.<br>• In 1192, Prithviraj was defeated by Ghori in the Second Battle of Tarain. This defeat paved the way for the entry of Turkish Muslim kingdoms into the Indian subcontinent for the first time in Indian history.<br>• After winning the battle, Ghori again entrusted the rule of Ajmer to Prithviraj. Later, he accused him of treason and killed him; he appointed his trusted general Qutb-ud-din Aibak as his deputy ruler for the Indian territories.<br>• Ghori's general Bakhtiyar Khilji invaded Bengal and Bihar. He destroyed the universities of Vikramashila and |

| | |
|---|---|
| நாளந்தா ஆகிய பல்கலைக்கழகங்களை இடித்து தள்ளினார் | Nalanda. |
| • 1194ல் சந்தவார் போரில் ஜெயச்சந்திரனை தோற்கடித்தார். | • In 1194, he defeated Jayachandra in the Battle of Chandawar. |
| • சந்தவார் போர் (Battle of Chandawar) என்பது கி.பி. 1194-ல் முகமது கோரிக்கும், கன்னோசியின் மன்னர் ஜெயச்சந்திரனுக்கும் இடையே யமுனை நதிக்கரையில் நடந்த ஒரு முக்கியப் போர். இதில் முகமது கோரி வெற்றி பெற்று, வட இந்தியாவில் துருக்கியரின் ஆதிக்கத்தை நிலைநாட்ட வழிவகுத்தது; ஜெயச்சந்திரன் போரில் கொல்லப்பட்டார். | • The Battle of Chandawar was a major battle fought in 1194 AD between Muhammad Ghori and King Jayachandra of Kannauj on the banks of the Yamuna River. Muhammad Ghori won this battle, which paved the way for the establishment of Turkish dominance in North India; Jayachandra was killed in the battle. |
| • முகமது கோரி ஒருநாள் மாலையில் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது, சியா பிரிவைச் சேர்ந்த புரட்சியாளர்களும், கோகர்களும் சேர்ந்து 1206ஆம் ஆண்டு மார்ச் 25ல் அவரைக் கொலை செய்தனர் | • While Muhammad Ghori was engaged in prayer one evening, revolutionaries from the Shia sect and the Khokhars together assassinated him on March 25, 1206. |

## டெல்லி சுல்தானியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகள்

- அல்–பெருனி: தாரிக்–அல்–ஹிந்த் (அரபு மொழியில்எழுதப்பட்ட இந்தியதத்துவஞானமும் மதமும்)
- மின்ஹஜ் உஸ் சிராஜ்: தபகத்–இ–நசிரி (1260) (அரபு மொழியில் எழுதப்பட்ட உலக இஸ்லாமிய வரலாறு)
- ஜியாவுத்தின் பாரனி: தாரிக்–இ–பெரோஸ் ஷாஹி (1357) பெரோஸ் துக்ளக் வரையிலான தில்லி சுல்தான்கள் வரலாறு
- அமிர் குஸ்ரு: மிஃப்தா உல் ஃபுதா (ஜலாலுதீன் கில்ஜியின் வெற்றிகள்); கஜைன்; உல் ஃபுதா (அலாவுதீன் கில்ஜியின் வெற்றிகள் – பாரசீக மொழியில்)
- துக்ளக் நாமா (பாரசீக மொழியில் துக்ளக் வம்ச வரலாறு)
- சம்ஸ்–இ–சிராஜ் அஃபிஃப்: தாரிக் இ ஃபெரோஜ் ஷாஹி (தில்லி சுல்தானியம் பற்றிப் பாரசீக மொழியிலுள்ள பாரனியின் குறிப்புகளை ஒட்டியது)
- குலாம் யாஹ்யா பின் அஹ்மத்: தாரிக்–இ–முபாரக் ஷாஹி (சையது ஆட்சியாளர் முபாரக் ஷாவின் ஆட்சியில் பாரசீக மொழியில் எழுதப்பட்டது)
- ஃபெரிஷ்டா: இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியின் வரலாறு (பாரசீக மொழி)

## Sources for the Study of Delhi Sultanate

- Al-Beruni: *Tarikh-Al-Hind* (Indian Philosophy and Religion written in Arabic)
- Minhaj us Siraj: *Tabaqat-i-Nasiri* (1260) (World Islamic History written in Arabic)
- Ziauddin Barani: *Tarikh-i-Firoz Shahi*(1357) History of Delhi Sultanate up to Firuz Tughlaq
- Amir Khusrau: *Mifta Ul Futuh* (Victories of Jalal-ud-din Khalji); *Khazain Ul Futuh* (Victories of Allauddin Khalji - Texts in Persian)
- *Tughlaq Nama* (History of Tughlaq dynasty in Persian)
- Shams-i-Siraj Afif: *Tarikh i Firuz Shahi* (after Barani's account of Delhi Sultanate in Persian)
- Ghulam Yahya Bin Ahmad: *Tarikh-i-Mubarak Shahi* (Written in Persian during the reign of Sayyid ruler Mubarak Shah)
- Ferishta: History of the Muslim Rule in India (Persian)

| வம்சங்கள் | Dynasties |
|---|---|
| • மம்லுக் வம்சம் (1206 – 1290)<br>• கில்ஜி வம்சம் -1290 1320<br>• துக்ளக் வம்சம்-1320 1414<br>• சையது வம்சம்-1414 – 1451<br>• லோடி வம்சம்-1451 1526 | • Mamluk Dynasty (1206 – 1290)<br>• Khilji Dynasty (1290 – 1320)<br>• Tughlaq Dynasty (1320 – 1414)<br>• Sayyid Dynasty (1414 – 1451)<br>• Lodi Dynasty (1451 – 1526) |
| **மம்லுக் வம்சம் (1206 – 1290)**<br>அடிமை வம்சத்தை மம்லக் வம்சம் என்றும் கூறுவர். மம்லக் என்பதற்கு உடைமை என்று பொருளாகும். இது, ஓர் அடிமை என்பதற்கான அரபுத் தகுதிப் பெயருமாகும்.<br>• இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சி முகமது கோரியால் கி.பி. (பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது.<br>• அவருக்கு மகன்கள் இல்லாத காரணத்தால் பன்டகன் (இராணுவப் பணிக்காக விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிக்கும் பாரசீகச் சொல்) எனும் தனிவகை அடிமைகளைப் பேணினார். | **The Slave Dynasty:**<br>The Slave dynasty is also known as the Mamluk dynasty. Mamluk means property. It is also the term for the Arabic designation of a slave.<br>• Muslim rule in India was established by Muhammad Ghori in the 12th century CE.<br>• As he had no sons, he maintained a special class of slaves called Bandagan (a Persian term referring to slaves purchased for military service). |

## குத்புதீன் ஐபக் (1206–1210)

குத்புதீன் ஐபக், சிறுவனாக இருந்த போதே கஜினியில் ஓர் அடிமையாக சுல்தான் முகமது கோரிக்கு விற்கப்பட்டார். அவரது திறமையையும் விசுவாசத்தையும் கண்ட முகமது கோரி, இந்தியாவில் தான் வெற்றிபெற்ற ஒரு மாகாணத்திற்கு பொறுப்பு ஆளுநராக அவரை நியமித்தார். பீகாரையும் வங்கத்தையும் கைப்பற்றுவதற்கு ஆப்கானிஸ்தானிலிருந்து வந்த முகமது–பின்–பக்தியார் கில்ஜி என்ற ஒரு துருக்கியத் தளபதி குத்புதீன் ஐபக்–கிற்கு உதவினார். குத்புதீன் ஐபக் நான்கு ஆண்டுகள் (1206–1210) ஆட்சி புரிந்தார்; அவர் புத்திசாலி என்றும் நேர்மையான நிர்வாகி என்றும் பெயரெடுத்தார். 1210இல் லாகூரில் சௌகான் (குதிரை போலோ) எனும் விளையாட்டின் போது நிகழ்ந்த ஒரு விபத்தில் இறந்தார்.

## Qutb-ud-din Aibak (1206-1210)

Qutb-ud-din Aibak was enslaved as a boy and sold to Sultan Muhammad Ghori at Ghazni. Impressed with his ability and loyalty the Sultan elevated him to the rank of viceroy of the conquered provinces in India. Muhammad Bin Bhakthiyar Khalji, a Turkish general from Afghanistan assisted him in conquering Bihar and Bengal. Qutb-ud-din Aibak reigned for four years (1206 to 1210 CE) and died in 1210 in Lahore in an accident while playing chaugan (Horse polo).

### குத்புதீன் ஐபக் கிபி (1206 - 1210)

- அடிமை வம்சத்தின் முதல் மன்னர்
- ஜூன் 24, 1206 ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்
- இந்தியாவில் துருக்கியர் ஆதிக்கத்தை தொடங்கி வைத்தார்.
- இவரின் தலைநகர் லாகூர்
- தனது பெயரில் நாணயங்களை வெளியிடுவதையும், குத்பா படிப்பதையும் இவர் விரும்பவில்லை
- நாட்டின் உள்ளாட்சியினை நிர்வகிக்க உள்ளூர் அதிகாரிகளை நியமித்தார்

### Qutb-ud-din Aibak (1206 - 1210 AD)

- The first ruler of the Slave Dynasty
- He assumed power on June 24, 1206
- He initiated Turkish rule in India.
- His capital was Lahore
- He did not wish to issue coins in his name or have the Khutbah read in his name.
- He appointed local officials to administer the local government of the country.

| | |
|---|---|
| • மாம்லுக் என்ற சொல்லின் பொருள் - அடிமை<br>• கோரிமுகமது இறப்புக்குப்பின் யால்டுஷ் மற்றும் குபாச்சா ஆகியோரை சமாளித்து குத்புதீன் ஐபக் அரசரானார்<br>• குத்புதீன் ஐபக் ஏழைகளுக்கு லட்சம் லட்சமாக வாரிக்கொடுத்ததால் லாக்பாக்ஷா என அழைக்கப்படுகிறார்<br>• கலை, இலக்கியங்களுக்கு வாரி கொடுத்ததால் மாலிக் என்று அழைக்கப்படுகிறார்<br>• அடிமை என்ற பொருள்படும் மாம்லுக் என்ற பட்டத்தை சூட்டிக்கொண்டார்<br>• டெல்லியில் குவாத்துல் இஸ்லாம் என்ற மசூதியை கட்டினார்.<br>• அஜ்மீரில் தாய்டின்கா - ஜோன்பரா என்ற மசூதியைக் கட்டினார்<br>• இராணுவத்தின் வலிமையை பயன்படுத்தியே மாம்லுக் ஆட்சியை நிலைநிறுத்தினார்.<br>• குதுப்-உத்-தீன்-பக்தியார் என்ற சூபித்துறவியின் நினைவாக குதுப்மினார் என்ற கோபுரத்தை கட்டத்தொடங்கினார்.<br>• அதனை இல்டுமிஷ் கட்டி முடித்தார்.<br>• சவ்கான் என்ற போலோ விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் போது குதிரையிலிருந்து தவறி விழுந்து இறந்தார்<br>• ஐபக் ஹசன் நிசாமி மற்றும் பக்ரே முதிர் ஆகிய புலவர்களை ஆதரித்தார்<br>• இவர் எந்த நாணயத்தையும் வெளியிடவில்லை. | • The meaning of the word Mamluk is - slave<br>• After the death of Muhammad Ghori, Qutb-ud-din Aibak became king after dealing with Yaldosh and Qubacha.<br>• Qutb-ud-din Aibak is called Lakh Bakhsh because he generously gave away lakhs of rupees to the poor.<br>• He is called Malik because of his generous patronage of arts and literature.<br>• He adopted the title Mamluk, which means slave.<br>• He built the Quwwat-ul-Islam mosque in Delhi.<br>• He built the Adhai Din Ka Jhonpra mosque in Ajmer.<br>• He established the Mamluk rule by utilizing the strength of the army.<br>• He began the construction of the Qutub Minar tower in memory of the Sufi saint Qutb-ud-din Bakhtiar.<br>• It was completed by Iltutmish.<br>• He died after falling from his horse while playing the game of Chaugan (polo).<br>• Aibak patronized the poets Hasan Nizami and Fakhr-i Mudabbir.<br>• He did not issue any coins. |

| | |
|---|---|
| புகழ்பெற்ற நாளந்தா பௌத்தப் பல்கலைக் கழகத்தை அழித்தவர் பக்தியார் கில்ஜி என்று கருதப்படுகிறது. சீனப் பயணி யுவான் சுவாங் தனது பயணக் குறிப்புகளில் நாளந்தா குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நாளந்தா நூலகத்தில் இருந்த இலக்கணம், இலக்கியம், தர்க்கம், வானியல், மருத்துவம் குறித்த நூறாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் நூல்களும் துருக்கியச் சூறையாடலில் அழிந்தன. | Bhakthiyar Khalji is charged with destroying the glorious Buddhist University of Nalanda in Bihar, who is said to have mistaken it for a military camp! Detailed descriptions of Nalanda is found in the travel accounts of Chinese pilgrim Hieun Tsang. The manuscripts and texts in the hundreds of thousands in the Nalanda library on subjects such as grammar, logic, literature, astronomy and medicine were lost in the Turkish depredations. |
| ஆரம்ஷா 1210-1211<br><br>• இவர் திறமையற்றவர்<br>• குத்புதீன் ஐபக்கின் மகன் ஆவார்<br>• 1211ல் இல்டுமிஷ் ஆரம்ஷாவைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினார். | Aram shah 1210-1211<br><br>• He is incompetent<br>• Qutbuddin was the son of Aibak.<br>• In 1211, Iltutmish killed Aram Shah and seized power. |
| **இல்டுமிஷ் (1211-1236)**<br><br>• இல்பாரி இனத்தை (மத்திய ஆசியா) சேர்ந்தவர். சிறுவனாக இருக்கும்போதே குத்புதீன் ஐபெக்கிடம் அடிமையாக விற்கப்பட்டார்.<br>• குத்புதீன் ஐபக்கின் மருமகன்<br>• டெல்லியை தலைநகராக கொண்டு ஆட்சி செய்த முதல் முஸ்லீம் சுல்தான்<br>• துருக்கியர் ஆட்சியை உண்மையில் நிறுவியவர் ஏனெனில் அவர் சுல்தானகத்தின் அதிகாரத்தைஒருங்கிணைத்தார்.<br>• தலைநகரை லாகூரிலிருந்து டெல்லிக்கு மாற்றினார்<br>• முதல் மங்கோலியப்படையெடுப்பு இவர் காலத்தில நடந்தது | **Iltutmish (1211-1236)**<br><br>• He belonged to the Ilbari tribe (Central Asia). As a boy, he was sold into slavery to Qutb-ud-din Aibak.<br>• He was Qutb-ud-din Aibak's son-in-law.<br>• The first Muslim Sultan to rule with Delhi as his capital.<br>• The true founder of Turkish rule in India because he consolidated the power of the Sultanate.<br>• • He shifted the capital from Lahore to Delhi.<br>• The first Mongol invasion took place during his reign.<br>• He received royal authority from the Turkish Sultan. |

| | |
|---|---|
| • இல்டுமிஷ் என்ற சொல்லுக்கு அரசுக்காப்பாளன் என்று பொருள் | • The word Iltutmish means "Guardian of the State". |
| • இவர் காலத்தில் செங்கிஸ்கான் படையெடுத்தார் (1221). குவாரிசம் மன்னர் ஜலாலுதீன் மங்கபர்னிக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்ததால் செங்கிஸ்கான் இவர் மீது படையெடுக்கவில்லை | • Genghis Khan invaded during his time (1221). Genghis Khan did not invade him because he refused to give refuge to the Khwarazmian king Jalal-ud-din Mangburni. |
| • குதுப்மினாரை கட்டி முடித்தார் | • He completed the construction of the Qutub Minar. |
| • டங்கா என்ற வெள்ளி நாணயத்தை (175மிகி எடை) வெளியிட்டார். இதில் அராபிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. | • He issued the silver coin called Tanka (weighing 175 mg). It was inscribed with Arabic script. |
| • ஜிடேல் என்ற செம்பு நாணயமும் வெளியிட்டார். அராபிய மொழியில் வெளியிட்ட முதல் துருக்கியர் | • He also issued a copper coin called Jital. He was the first Turk to issue coins in Arabic. |
| • மூன்றாம் தரெய்ன் போரில் 1215-16 ல் கஜினியின் ஆட்சியாளரான தாஜ் அல்-தின் இல்துசை வென்றார். | • In the Third Battle of Tarain in 1215-16, he defeated Taj al-Din Ilduz, the ruler of Ghazni. |
| • 1228-ல் டெல்லி சுல்தான் **இல்துமிஷ்** (Iltutmish), உச் (Uch) மற்றும் முல்தான் பகுதிகளை ஆண்டு வந்த நசுருதீன் குபாச்சாவை (Nasir-ad-Din Qabacha) தோற்கடித்து வென்றார். குபாச்சா தங்கியிருந்த பக்கார் (Bhakar) பகுதியையும் கைப்பற்றிய இல்துமிஷ், வட இந்தியாவில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தினார். | • Iltutmish, the Delhi Sultan , defeated Nasir-ad-Din Qabacha, who ruled over the regions of Uch and Multan. Iltutmish also captured the region of Bhakar, where Qabacha was staying, and established his influence in northern India. This is believed to have happened in 1228 |
| • 1230ல் வங்காளத்தில் துக்ரில்கானை வென்று புரட்சியை அடக்கினார். | • In 1230, he suppressed the rebellion in Bengal by defeating Tughril Khan. |
| • முதன்முதலில் அரேபிய நாணயங்களை வெளியிட்டார் | • He was the first to issue Arabic coins. |
| • நிலங்களை பல இக்தாக்களாக பிரித்தார் | • He divided the lands into several Iqtas. |
| • நாற்பதின்மர் குழுவை உருவாக்கினார். அவர்கள் சகல்கான்கள் எனப்பட்டனர் | • He created the Group of Forty, who were called the Chahalganis. |
| | • Iltutmish was the slave of a slave. |
| | • He was the one who started hereditary politics among Muslims. |

| | |
|---|---|
| • அடிமைகளின் அடிமை இல்டுமிஷ்<br>• முஸ்லீம்களில் பரம்பரை அரசியலை தொடங்கியவர்<br>• இவரின் படைத்தளபதி பக்தியார் கில்ஜி உஜ்ஜயினி மகாகாளி கோவிலை தரைமட்டமாக்கினார்.<br>• நாளந்தா பல்கலைக்கழகத்தை பக்தியார் கில்ஜி தரைமட்டமாக்கினார். | • His commander Bakhtiyar Khilji razed the Mahakali temple in Ujjain to the ground.<br>• Bakhtiyar Khilji also razed Nalanda University to the ground. |
| | |
| **ரசியா பேகம் (1236-40)**<br><br>• இல்டுமிஷ் புதல்வி ரசியா ஆணுடை தரித்து அரசவையில் அமர்ந்தார்<br>• பிரோஷ்ஷாவைத் தோற்கடித்துக் கொன்று பட்டத்து ராணியானார்.<br>• டெல்லியை ஆண்ட முதல் பெண்ணரசி<br><br>• அரச அதிகாரத்தை முதன்முதலில் திணித்தார்<br><br>• இவர் ஆட்சி பொறுப்பேற்றதை உயர்குடி பிரபுக்கள் எதிர்த்தனர். ஆணுடை தரிப்பதும், முகத்திரை இல்லாமல் வெளியே வருவதும் அவர்களுக்கு பிடிக்கவில்லை<br><br>• ஜமாலுதீன் யாகூத் என்ற அபிசீனிய அடிமையிடம் அதிக அன்பு காட்டியது மற்றவர்களுக்கு பிடிக்கவில்லை<br><br>• இவரை அல்டூனியா என்பவர் தோற்கடித்தார். பின் அவரையே திருமணம் செய்தார். ஆனாலும் உயர்குடி கிளர்ச்சியாளர்களால் இவர் கொல்லப்பட்டார<br><br>• இந்தியாவில் துருக்கிய அரசின் பெருமைகளை மீட்டுக்கொடுத்த சிறப்பினைப் பெற்றார்<br><br>**<u>ரசியாவின் வழிவந்தோர்</u>**<br><br>• பக்ரம்ஷா (1240- 1242) | Razia Begum (1236-40)<br><br>• Iltutmish's daughter, Razia, dressed in men's attire and sat in the royal court.<br>• She defeated and killed Firuz Shah and became the queen.<br>• The first female ruler to rule Delhi.<br><br>• She was the first to assert royal authority.<br><br>• The noblemen opposed her accession to the throne. They disliked her wearing men's clothing and appearing in public without a veil.<br><br>• Her excessive affection for an Abyssinian slave named Jamal-ud-din Yaqut was disliked by others.<br><br>• She was defeated by Altunia, whom she later married. However, she was killed by the rebellious nobles.<br><br>• She is credited with restoring the glory of the Turkish rule in India.<br><br><u>Razia's successors</u>:<br>• Bahram Shah (1240-1242) |

| | |
|---|---|
| • அலாவுத்தீன் மசூத்( 1242 1246)<br>• நசிருத்தின் மகமூத் (1246 1264) | • Alauddin Masud (1242-1246)<br>• Nasiruddin Mahmud (1246-1264 |
| **கியாசுதீன் பால்பன் (1266 – 1287)**<br><br>• "நாற்பதின்மர்" என்றறியப்பட்ட துருக்கியப் பிரபுக்கள் குழு அவரோடு பகைமை பாராட்டியதால் அவ்வமைப்பைப் பால்பன் ஒழித்தார்.<br>• தனது ஆட்சிக்கு எதிராகச் சதி செய்வோரையும், இடையூறாய் இருப்போரையும் கண்டறிய ஒற்றர் துறையொன்றை நிறுவினார்.<br>• அரசு அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாமை, எதிர்த்தல் போன்றவற்றைக் கடுமையாகக் கையாண்டார்.<br>• பால்பனுக்கு எதிராகக் கலகம் செய்ததால் வங்காள மாகாண ஆளுநராக இருந்த (துக்ரில்கான்) கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.<br>• தனது எதிரிகளான மீவாட்டைச் சேர்ந்த மியோக்கள் (வடமேற்கு இந்தியாவைச் சேர்ந்த ராஜபுத்திர முஸ்லீம் இனத்தினர்) போன்றோரிடம் கருணையில்லாமல் நடந்துகொண்டார்.<br>• மங்கோலியர்களுடன் இணக்கமான உறவைப் பராமரிப்பதில் கவனத்துடன் செயல்பட்டார்.<br>• செங்கிஸ்கானின் பேரனும், ஈரானின் மங்கோலிய வைஸ்ராயுமான குலகுகான் என்பாரிடமிருந்து " "மங்கோலியர்கள் சட்லஜ் நதியைக் கடந்து " படையெடுத்து வரமாட்டார்கள்" எனும் உறுதிமொழியைப் பால்பன் பெற்றார்.<br>• மங்கோலியரின் தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காகப் பால்பன் பல கோட்டைகளைக் கட்டினார்.<br>• பாரசீகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞரான அமிர்குஸ்ரு என்பாரைப் பால்பன் ஆதரித்தார். | **Ghiyas-ud-din Balban (1266 - 1287)**<br><br>• Balban abolished The Forty as it was hostile to him.<br>• He established a department of spies to gather intelligence about the conspirators and the trouble makers against his rule.<br>• He dealt with insubordination and defiance of royal authority sternly.<br>• Tughril Khan, a provincial governor of Bengal, who raised a banner of revolt against Balban, was captured and beheaded.<br>• He was ruthless in dealing with enemies like Meos of Mewat (a Muslim Rajput community from north-western India).<br>• Balban, however, took care to maintain cordial relationship with the Mongols.<br>• He obtained from Hulagu Khan, a grandson of Chengiz Khan and the Mongol viceroy in Iran, the assurance that Mongols would not advance beyond Sutlej.<br>• Balban built forts to guard his empire against the Mongol attacks.<br>• He patronised the famous Persian poet Amir Khusru.<br>• Balban encouraged people to do the 'sijdah' in his |

| | |
|---|---|
| • பால்பன் தனது முன்னிலையில் 'சிஜ்தா' செய்ய மக்களை ஊக்குவித்தார். சிஜ்தா என்றால், மக்கள் அவருக்கு (பால்பானுக்கு) வணக்கம் செலுத்தும் விதமாக மண்டியிட்டு நெற்றியைத் தரையில் தொட வேண்டும்.<br>• "அனைத்து மனிதர்களும் சமம், எனவே, கடவுளைத் தவிர வேறு யாருக்கும் முன்பாக யாரும் ஸிஜ்தா செய்யக்கூடாது" என்ற முஸ்லிம் நம்பிக்கையின்படி, ஸிஜ்தா, மரபுவழி முஸ்லிம்களை திகிலடையச் செய்தது.<br>• பால்பன் 1287 மரணமுற்றார்.<br>• பால்பனின் மகனான கைகுபாத் திறமையற்றவராக இருந்தார்.<br>• 1290 படைத்தளபதியாக பணியாற்றிய மாலிக் ஜலாலுதீன் கில்ஜி அரசப்பிரதிநிதியாகப் (நாயிப்) பொறுப்பேற்றார்.<br>• சுல்தான் கைகுபாத்தின் பெயரால் ஜலாலுதீன் கில்ஜி நாட்டையாண்டார்.<br>• பின்னர் ஒரு நாளில் ஜலாலுதீனால் அனுப்பப்பட்ட அதிகாரி ஒருவரால் கைகுபாத் கொல்லப்பட்டார். அதன் பின்னர் ஜலாலுதீன் முறையாக அரியணை ஏறினார். அவரிலிருந்து கில்ஜி வம்சத்தின் ஆட்சி தொடங்கிற்று. | presence. Sijdah means, people had to kneel and touch the ground with their forehead in salutation to him (Balban).<br>• Sijdah, horrified the orthodox Muslims. According to Muslims belief, "all men are equal, and therefore, no one should do the sijdah before anyone else except God."<br>• Balban died in 1287.<br>• Balban's son Kaiqubad turned out to be weak.<br>• In 1290 Malik Jalal-ud-din Khalji, the commander of the army, assumed the office of Naib (a deputy to the Sultan) and ruled the kingdom in the name of Kaiqubad.<br>• Then one day, Jalal-ud-din sent one of his officers and had Kaiqubad murdered. Jalal-ud-din then formally ascended the throne. With him began the rule of Khalji dynasty. |
| | |
| Kilgi Dynasty | |
| ஜலாலுதீன் பெரோஸ் கில்ஜி (1290-1296)<br>• கைகுபாத்தின் பெயரால் அரசாட்சி செய்த ஜலாலுதீன் அவரை கொல்வதற்கு ஒரு அதிகாரியை அனுப்பினார். விரைவிலேயே ஜலாலுதீன் முறைப்படி அரசரானார்.<br>• ஜலாலுதீன் ஓர் ஆப்கானியர். துருக்கியர் அல்லர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிர்ப்பிருந்தது. | **Jalal-ud-din Feroz Khalji (1290-1296)**<br>• While he ruled the kingdom for some time in the name of Kaiqubad, he soon sent one of his officers to get Kaiqubad murdered and Jalal-ud-din formally ascended the throne.<br>• However, Jalal-ud-din faced opposition on the ground that he was an Afghan and not a Turk.<br>• But Khaljis were indeed Turks settled in Afghan-istan before the |

| | |
|---|---|
| • உண்மையில் கில்ஜிகள், ஆப்கானிஸ்தானில் துருக்கிய ஆட்சி நிறுவப்படுவதற்கு முன்பே அங்கு குடியமர்ந்தவர்கள். | establishment of Turkish rule. |
| • பிற்காலத்தில் அமைதியான முறையில் ஆட்சியை நடத்தினார். மேலும் இரத்தம் சிந்தாத ஆட்சியை வழங்க விரும்பினார். | • He wanted to rule without blood shed. |
| • எனவே இவர் கருணை உள்ளம் கொண்ட ஜலாலுதின் எனப் புகழப்பட்டார். | • Hence, he was called as clemency Jalal-ud-din. |
| • தமது முதிர்வயதில் கூட மங்கோலிய கூட்டங்களை எதிர்த்து அணிவகுத்த அவர், இந்தியாவுக்குள் அவர்கள் நுழைவதை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தினார் (1292). | • Jalal-ud-din won many battles and even in old age he marched out against the Mongol hordes and successfully halted their entry into India (1292). |
| • காராவின் பொறுப்பு ஆளுநரான அலாவுதின் கில்ஜி, ஜலாலுதினின் உடன்பிறந்தாரின் மகனும் மருமகனுமாவார். | • Alla-ud-din, a nephew and son in-law of Jalaluddin Khalji, who was appointed governor of Kara. |
| • அலாவுதீன் இச்சமயத்தில் மால்வா மீது படையெடுத்து (1305 CE) பெருஞ்செல்வத்துடன் திரும்பினார். | • Alla-ud-din invaded Malwa(1305 CE) and this campaign yielded a huge booty. |
| • அலாவுதீன் கில்ஜியின் முக்கியப் படையெடுப்பு தக்காண அரசான தேவகிரிக்கு எதிராக மேற்கொண்டதாகும். | • One significant military expedition was against the Deccan Kingdom Devagiri. |
| • அலாவுதீன் தேவகிரி யாதவ அரசர் ராம்ச்சந்திரனைத் தோற்கடித்த பின்னர் அந்நகரைக் கொள்ளையடித்துப் பெருஞ்செல்வத்தோடு திரும்பினார். | • Ala-ud-din, after defeating the Yadava King Ramachandra, Plundered the city and returned with huge wealth. |
| • டெல்லி திரும்பிய அலாவுதீனின் ஏற்பாட்டில் ஜலாலுதீன் கொல்லப்பட்டார். அலாவுதீன் அரியணை ஏறினார். | • On his return to Delhi, he arranged to get Jalaluddin Khalji murdered and captured the throne.<br>• |
| • ஜலாலுதீனை வஞ்சகமாகக் கொன்றார். | • Ala-ud-din treacherously killed Jalal-ud-din |
| • அதனைத் தொடர்ந்து 1296இல் தன்னை டெல்லியின் சுல்தானாக அறிவித்துக் கொண்டார். | • He declared himself as the Sultan of Delhi in 1296. |

| | |
|---|---|
| • இவ்வாறாக ஜலாலுதீனின் ஆறாண்டுக் கால ஆட்சி 1296இல் முடிவுக்கு வந்தது.<br>• | • Thus ended Jalaluddin's six year rule in 1296. |
| **அலாவுதீன் கில்ஜி (1296-1316)**<br>• அலாவுதீன் டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்து உறுதிப்படுத்தினார்.<br>• அலாவுதீன் கில்ஜி தனது தலைமைத் தளபதி மாலிக் கபூரை 1310 இல் தென்புலத்தின் வெகுதொலைவிலுள்ள மதுரை வரை படையெடுக்கப் பணித்தார்.<br>• தக்காண அரசுகளான தேவகிரி யாதவர்கள், துவார சமுத்திரத்தின் ஹொய்சாளர்கள், வாராங்கல் காகத்யர்கள், மதுரைப் பாண்டியர்கள் ஆகிய அனைவரும் அலாவுதீனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.<br>• பாண்டியப் பேரரசில் நிகழ்ந்த வாரிசுரிமைப் போரில் (மாலிக்கபூர் தலையிட்டு சுந்தர பாண்டியனை அரியணையில் அமரச் செய்தார். | **Ala-ud-din Khalji (1296-1316)**<br>• Ala-ud-din Khalji consolidated the Delhi Sultanate.<br>• He sent his chief lieutenant Malik Kafur into the southern parts who took even the distant Madurai 1310.<br>• The Yadavas of Devagiri, the Kakatiyas of Warangal, the Hoysalas of Dwarasamudra and the Pandyas of Madurai accepted Ala-ud-din's suzerainty.<br>• Malik Kafur helped Sundara Pandya against his rival Vira Pandya.<br>•<br>• |
| **மங்கோலிய அச்சுறுத்தல்கள்**<br>• மங்கோலியப் படையெடுப்புகள் அலாவுதீனுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்தன.<br>• அவரது 2-வது ஆட்சி ஆண்டில் (1298) மங்கோலியர் தில்லியை உக்கிரமாகத் தாக்கினர்.<br>• கடைசி மங்கோலியத் தாக்குதல் 1307-08இல் நிகழ்ந்தது. இது மிகப் பிரம்மாண்டமாக இருந்தது.<br>• ஆனாலும், மங்கோலியருக்குக் கிடைத்த கடுமையான | Mongol Threats:<br>• Mongol raids posed a serious challenge to Ala-ud-din.<br>• During the second year of his rule (1298).<br>• When Mongols stormed Delhi, the army sent by Ala-ud-din succeeded in driving them back.<br>• The last major Mongol incursion took place in 1307-08.<br>• However, the Mongols fierce retalia-tion prevented |

| | |
|---|---|
| பதிலடி, அதன் பிறகு உள்ளே நுழைந்து தாக்காதவாறு தடுத்தது. | them from entering. |
| **இராணுவத் தாக்குதல்கள்**<br><br>• தேவகிரி- (1296, 1307, 1314).<br>• குஜராத் -(1299-1300),<br>• ரான்தாம்பூர் (1301),<br>• சித்தூர் (1303),<br>• மால்வா (1305)<br><br>• 1301 இல் அலாவுதீன் கில்ஜி ராந்தம்பூருக்கு எதிராக போர் தொடுத்தார் மூன்று மாத முற்றுகைக்குப்பின் அது வீழ்ந்தது.<br>• ராஜபுத்திரப் பெண்கள் ஜவஹர் என்ற வழக்கப்படி தீக்குளித்து மாண்டனர்.<br>• அலாவுதீனின் அடுத்த இலக்கு சித்தூர்<br><br>• தீபகற்பத்தில் அவருடைய முதல் இலக்கு மேற்கு தக்காணத்தில் இருந்த தேவகிரியாகும்.<br><br>• 1307ஆம் ஆண்டு தேவகிரி கோட்டையைக் கைப்பற்றுவதற்காக மாலிக் கஃபூர் தலைமையில் ஒரு பெரும் படையை அலாவுதீன் அனுப்பினார்:<br><br>• இதைத் தொடர்ந்து, தெலுங்கானா, பகுதியிலிருந்த வாராங்கல்லின் காகதீய அரசர் பிரதாபருத்ரதேவா 1309இல் தோற்கடிக்கப்பட்டார்.<br><br>• 1310இல் தோல்வியடைந்த ஹொய்சாள அரசர் மூன்றாம் வீரவல்லாளன், அவரது செல்வங்கள் அனைத்தையும் தில்லித் துருப்புகளிடம் ஒப்படைத்தார். | **Military Campaigns:**<br>• Devagiri (1296, 1307, 1314),<br>• Gujarat (1299-1300),<br>• Ranthambhor (1301),<br>• Chittor (1303)<br>• Malwa (1305) were meant to proclaim his political and military power as well as to collect loot from the defeated kingdoms.<br>• Then in 1301, Alauddin marched against Ranthampur and after a three month's siege it fell.The Rajput women committed jauhar or self-immolation.<br>• Alauddin next turned against Chittor.<br>• The first target in the peninsula was Devagiri in the western Deccan.<br><br>• Ala-ud-din sent a large army commanded by Malik Kafur in 1307 to capture Devagiri fort.<br><br>• Following Devagiri, Prataparudradeva, the Kakatiya ruler of Warangal in the Telengana region, was defeated in 1309.<br><br>• In 1310 the Hoysala ruler Vira Ballala III surrendered all his treasures to the Delhi forces. |

| | |
|---|---|
| • மாலிக் கஃபூர் தமிழ்நாட்டுக்குப் புறப்பட்டார். கனத்த மழை, வெள்ளத்தால் கஃபூர் முன்னேறுவது தடைபட்டபோதும், சிதம்பரம், திருவரங்கம் ஆகிய கோயில் நகரங்களையும் பாண்டியர் தலைநகரம் மதுரையையும் சூறையாடினார். | • Malik Kafur then set out for the Tamil country.Though Kafur's progress was obstructed by heavy rains and floods, he continued his southward journey, plundering and ravaging the temple cities of Chidambaram and Srirangam as well as the Pandyan capital Madurai. |
| **சித்தூர் சூறையாடல் (1303)**<br><br>• **அலாவுதீன் கில்ஜியால்** சித்தோர்கார் கோட்டையை முற்றுகையிட்டு கைப்பற்றிய வரலாற்று நிகழ்வைக் குறிக்கிறது .<br><br>• சித்தூரின் ராணி பத்மினியை **அடைய** அல்லது மேவார் மன்னர் ரத்தன் சிங்கைத் தண்டிக்க மேற்கொள்ளப்பட்டது, இது சித்தூர் முற்றுகை (1303) என்றும் அழைக்கப்படுகிறது.<br><br>• சித்தூரில்ராஜபுத்திரப்படைகளை அலாவுதீனின் படைகள் திணறடித்த நிலையில் தோல்வியடைந்துவிடுவோம் என்ற சூழலில் கோட்டைக்குள் இருந்த ஆடவரும் பெண்டிரும் தங்களது பண்டைய மரபின்படி ஜவ்ஹர் எனப்படும் சடங்கை நடத்தினர்.<br><br>• இதன்படி ஆடவர் கோட்டையை விட்டு வெளியேறிப் - போர்க்களத்தில் மாள்வர்.பெண்கள் தீப்புகுந்து தங்களை மாய்த்துக் கொள்வர்.<br><br>• ராஜா ரத்தன்சிங்கும் அவனது வீரர்களும் வீரத்துடன் போரிட்டனர். ஆனால் அடிபணிந்தனர்.<br><br>• இராணி பத்மாவதி உள்ளிட்ட ரஜபுத்திர மகளிர் தீக்குளித்தனர்.<br><br>• | Sack of Chittor (1303)<br><br>• The Sack of Chittor refers to the historical event of the siege and capture of Chittorgarh Fort by the Delhi Sultan Alauddin Khilji in 1303 ,<br><br>• which, according to historians and legends, was undertaken to captureQueen Padmini of Chittor or to punish King Ratan Singh of Mewar, also known as the Siege of Chittor (1303).<br><br>• When Ala-ud-din's army overwhelmed the Ra-jput army in Chittor and in the context of threat of defeat, the men and women of the fortress, in accordance with their old custom, performed the rite of jauhar.<br><br>• the men would go out and die in the field of battle. women ask burn themselves on a pyre.<br><br>• Raja Ratan Singh and his warriors fought val-iantly. But surrendered.<br><br>• Rajput women, including Rani Padmavati were set on fire.<br><br>• The story of Padmini was beautifully ex-plained in his book Padmavath by Jaisi. |

| | |
|---|---|
| • பத்மினி கதையை பத்மாவத் என்ற நூலில் ஜெயசி அழகாக விளக்கியுள்ளார்.<br>• | |
| **அலாவுதீன் கில்ஜியின் நிர்வாகச் சீர்திருத்தங்கள்**<br>• சுல்தானின் ஒப்புதலோடு மட்டுமே மரபுக் குடும்பங்களுக்-கிடையில் திருமண உறவுகள் அனுமதிக்கப்பட்டன.<br>• பரிசாகவோ, மதம் சார்ந்த அறக்கொடையாகவோ அளிக்கப்பட்டுச் சொத்துரிமை அடிப்படையில் வைத்திருந்த கிராமங்களை மீண்டும் அரச அதிகாரத்தின் கீழ் கொண்டுவர சுல்தான் ஆணையிட்டார்.<br>• ஊழல் வயப்பட்ட அரச அலுவலர்களைக் கடுமையாகத் தண்டித்தார்.<br>• மதுவும் போதை மருந்துகளின் பயன்பாடும் தடை செய்யப்-பட்டன. சூதாட்டமும் தடைசெய்யப்பட்டது.<br>• உழவர்களிடமிருந்துநிலவரிகள் நேரடியாக வசூலிக்கப்பட்டன. இதனால் கிராமத் தலைவர்கள் மரபாக அனுபவித்து வந்த வரிகள் வசூலிக்கும் உரிமை பறிபோனது.<br>• அலாவுதீன் விதித்த வரிச்சுமை செல்வர்கள் மீது இருந்ததேயன்றி ஏழைகள் மீது அல்ல.<br>• தனது பேரரசின் அனைத்துப் பகுதிகளுடனும் தொடர்பில் இருப்பதற்காக அலாவுதீன் அஞ்சல் முறையை ஏற்படுத்தினார்.<br>• குதிரைகளுக்கு தாக்' கிணைப்படும் ஆடுபோடும் முறையையும் அவர் அறிமுகப்படுத்தினார்.<br>• | Ala-ud-din's Administrative Reforms<br>• Marriage alliances between families of noble men were permitted only with the consent of the Sultan.<br>• The Sultan ordered that villages held by proprietary right, as free gift, or as a religious endowment be brought back under the royal authority and control.<br>• Corrupt royal officials were dealt with sternly.<br>• The Sultan prohibited liquor and banned the use of intoxicating drugs. Gambling was forbidden<br>• Collected land taxes directly from the cultivators. The village headman who traditionally enjoyed the right to collect them was now deprived of it.<br>• The tax pressure of Ala-ud-din was on the rich and not on the poor.<br>• Ala-ud-din set up the postal system to keep in touch with all parts of his sprawling empire.<br>• |
| | |

| சகல்கானி - நாற்பதின்மர் | Chahalgani - The Corps of Forty |
| --- | --- |
| • தகுதியிலும் வரிசையிலும் சுல்தானை அடுத்துப் பிரபுக்கள் இருந்தனர்.<br>• இல்துமிஷ், நாற்பதின்மர் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்களிலிருந்து தெரிவு செய்து இராணுவத்திலும் குடிமை நிர்வாகத்திலும் நியமித்தார்.<br>• இல்துமிஷ் இறந்த பிறகு, ருக்னுத்தின் ஃபெரோஸை அரசனாக்க வேண்டும் என்ற இல்துமிஷின் விருப்பத்தைப் புறந்தள்ளும் அளவுக்கு அந்த நாற்பதின்மர் குழு வலுமிக்கதாயிற்று.<br>• இரஸியா, தனது நலன்களைக் காத்துக்கொள்வதற்காக, அபிசீனிய அடிமை யாகுத் தலைமையில் துருக்கியரல்லாத பிரபுக்களையும் இந்திய முஸ்லீம் பிரபுக்களையும் கொண்ட ஒரு குழு அமைத்தார்.<br>• பிரபுக்கள் பல குழுக்களாக சுல்தானுக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டனர்.<br>• எனவே, அந்த நாற்பதின்மர் அமைப்பு சுல்தானியத்தின் நிலைத்தன்மைக்குப் பெரிய அபாயத்தை ஏற்படுத்துகிறது. என்று கூறி, அதை பால்பன் ஒழித்தார்; இதன் மூலம் "துருக்கிய பிரபுக்கள்" ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்.<br>• அலாவுதீன் கில்ஜி, ஒற்றர்களைப் பணியமர்த்தி, துருக்கியப் பிரபுக்களின் கள்ளத்தனமான நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால் தம்மிடம் நேரடியாகத் தெரிவிக்குமாறு பணித்து, அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுத்தார். | • There were nobles next to sultan in rank and order.<br>• Iltumish formed a committee of forty and selected from them and appointed them to the army and civil administration.<br>• The Corps of Forty became so powerful to the extent of disregarding the wishes of Iltutmish, and after his death, to place Rukn-ud-Din Firoz on the throne.<br>• Razziya sought to counter the influence of Turk-ish nobles and defend her interest by organizing a group of non-Turkish and Indian Muslim nobles under the leadership of Yakut, the Abyssinian slave.<br>• The nobles were organized into several factions and were constantly engaged in conspiracies.<br>• Balban therefore abolished the Corps of Forty and thereby put an end to the domination of "Turkish nobles".<br>• Alauddin Khalji also took stern measures against the "Turkish nobles" by employing spies to report to him directly on their clandestine and perfidious activities. |
| **சந்தைச் சீர்திருத்தங்கள்** | **Market Reforms** |

| | |
|---|---|
| • படை வீரர்களுக்குக் கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் அலாவுதீன் ஆவார்.<br>• படை வீரர்களுக்குக் குறைந்த ஊதியமே அளிக்கப்பட்டது. இதனால், விலைகளைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் வேண்டியிருந்தது.<br>• அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, கள்ளச்சந்தை, பதுக்கல் குறித்த விவரங்களைச் சேகரிப்பதற்கு விரிவான ஒற்றாடல் வலைப்பின்னலை ஏற்படுத்தினார்.<br>• சந்தைகளில் நடந்த கொடுக்கல்-வாங்கல், வாங்குவது. விற்பது, பேரங்கள் என அனைத்து விவரங்களையும் ஒற்றர்கள் மூலம் அறிந்துகொண்டார்.<br>• விலை ஒழுங்குமுறை விதிகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.<br>• ஏதேனும் எடைக் குறைவு கண்டுபிடிக்கப்பட்டால், விற்பவரின் உடலிலிருந்து அதற்குச் சமமான எடையுள்ள சதை வெட்டி அவரது கண் முன்னேயே வீசப்பட்டது.<br>• அங்காடியைக் கட்டுப்படுத்த திவானி ரியாசத், சஹானா-இ-மண்டி என்று இரு அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். | • Ala-ud-din was the first Sultan to pay his soldiers in cash rather than give them a share of booty.<br>• As the soldiers were paid less, the prices had to be monitored and controlled.<br>• In order to restrict prices of essential commodi-ties, Ala-ud-din set up an elaborate intelligence network to collect information on black-marketing and hoarding.<br>• The transactions in the bazaars, the buying and selling and the bargains made were all reported to the Sultan by his spies.<br>• Violators of the price regulations were severely punished.<br>• If any deficiency in weight was found, an equal weight of flesh was cut from the seller's body and thrown down before his eyes<br>• Officers like Diwan-i-riyasat and Shahana-i-mandi were appointed to regularize the market. |
| **அலாவுதீன் வாரிசுகள்**<br>• அலாவுதீன், தனது மூத்த மகன் கிசர் கானை தமது வாரிசாக நியமித்தார். இருப்பினும் அந்நேரத்தில் அலாவுதீனின் நம்பிக்கைக்குரியவராக மாலிக் கஃபூர் இருந்தார்.<br>• எனவே, மாலிக் கஃபூர் தாமே அரசாங்க அதிகாரத்தை எடுத்துக்கொண்டார். | **Ala-ud-din's Successors**<br>• Ala-ud-din nominated his eldest son Khizr Khan, as his successor. However, Ala-ud-din's confidant at that time was Malik Kafur.<br>• So Malik Kafur himself assumed the authority of the government.<br>• But Kafur's rule lasted only thirty-five days as he was assassinated by hostile nobles. |

| | |
|---|---|
| • ஆனால் ஆட்சிக்கு வந்த வெறும் முப்பந்தைந்தே நாள்களில் பிரபுக்களால் அவர் கொல்லப்பட்டார்.<br>• குதுப்-உத்-தீன்-முபாரக்ஷா (பொ.ஆ.1316-1320)<br>• நஸிர்-உத்-தீன்-குஸ்ரு-ஷா (பொ.ஆ.1320)<br>• மங்கோலியருக்கு எதிரான பல படையெடுப்புகளில் பங்கேற்ற திறமைசாலியான காஸி மாலிக் 1320இல் கியாசுதீன் துக்ளக் ஆக ஆட்சியில் அமர்ந்தார்.<br>• பதவியிலிருந்த கில்ஜி ஆட்சியாளர் குஸ்ரௌவைக் கொன்றதன் மூலம் கில்ஜி வம்சத்திலிருந்து எவரும் அரசுரிமை கோருவதைத் தடுத்தார். | • Qutb-ud-din Mubarak Shah (1316 - 1320 C.E.)<br>• Nasir-ud-din Khusrau shah (1320 C.E.)<br>• Ghazi Malik, a veteran of several campaigns against the Mongols, ascending the throne of Delhi in 1320 as Ghiyas-ud-din Tughlaq.<br>• He murdered the incumbent Khalji ruler Khusrau and thereby prevented anyone from Khalji dynasty claiming the throne. |
| | |
| | |
| துக்ளக் வம்சம்(1320 – 1414)<br>கியாசுதீன் துக்ளக் (1320 – 1324)<br>• அலாவுதீன்கில்ஜியின் இறப்பைத்தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணமாக டெல்லி சுல்தானியம் பல பகுதிகளை இழக்க நேரிட்டது. அவற்றை மீட்பதே கியாசுதீனுக்குப் பெரும்பணியாக அமைந்தது.<br>• கியாசுதீன் துக்ளக் தனது மகன் ஜூனாகானை வாராங்கல்லுக்கு எதிராகப் போரிட அனுப்பிவைத்தார். ஜூனாகான் வாராங்கல் அரசர் பிரதாப ருத்ரனை வெற்றி கொண்டு கொள்ளையடித்த பெருஞ்செல்வத்தோடு ஊர் திரும்பினார்.<br>• இச்செல்வத்தைக் கொண்டே கியாசுதீன் துக்ளக் டெல்லிக்கு அருகே துக்ளகாபாத் எனும் புதிய நகரை நிர்மாணம் செய்ய அடிக்கல் நாட்டினார்.<br>• இருந்தபோதிலும் அலாவுதீன் தனது மாமனாரை வஞ்சமாகக் கொன்றது போலவே ஜூனாகானும் தனது | Tughluq Dynasty (1320 - 1414)<br>Ghiyas-ud-din (1320 - 1324)<br>• One of the major tasks of Ghiyas-uddin as the Sultan was to recover the territories that the Sultanate had lost during the turmoil following the death of Ala-ud-din.<br>• Ghiyasud-din Tughluq sent his son Jauna Khan to fight against Warangal. Jauna Khan defeated Pratabarudra of Warangal and returned with a rich booty.<br>• With this looted wealth, Ghiyas-uddin is said to have laid the foundation of the city Tughluqabad near Delhi.<br>• However, as Ala-uddin treacherously killed his uncle, Jauna Khan was said to have killed his father and ascended the throne with title |

| | |
|---|---|
| தந்தையைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதாகச் சொல்லப்படுகிறது.<br>• ஜூனாகான் முகமதுபின் துக்ளக் எனும் பெயரோடு 1325இல் அரியணை ஏறினார். | Muhammad-bin-Tughluq in 1325. |
| முகமது-பின்-துக்ளக் (1324-1351)<br><br>• முகமது-பின்-துக்ளக் கற்றவர், நற்பண்பு நிறைந்தவர் திறமை வாய்ந்த அரசர் என்ற போதிலும் இரக்கமற்றவர்,<br><br>• தில்லிக்கு அருகே மீரட் வரையிலும் அணிவகுத்து வந்த மங்கோலியப் படையை முகமது-பின்-துக்ளக் திறமையாகப் பின்வாங்கச் செய்தார்.<br><br>• தில்லியிலிருந்து தென்னிந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது-பின்-துக்ளக் கருதினார்.எனவே, தலைநகரை தௌலதாபாத்துக்கு மாற்றும். துணிவான முயற்சியை மேற்கொண்டார்.<br><br>• மகாராஷ்ட்டிரத்தி லுள்ள தேவகிரிக்கு முகமது-பின்-துக்ளக் சூட்டிய மறுபெயரே தௌலதாபாத் இந்தத் திட்டம் தோல்வியைத் தழுவியது.<br><br>• தௌலதாபாத்திலிருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்று முகமது-பின்-துக்ளக் விரைவிலேயே உணர்ந்த அவர் மீண்டும் தலைநகரை தில்லிக்கு மாற்ற உத்தரவிட்டார். | Muhammad Bin Tughlaq (1324 - 1351)<br><br>• Muhammad Tughlaq was a learned, cultured and talented prince but gained a reputation of being merciless.<br><br>• Muhammad Tughlaq effectively repulsed the Mongol army that had marched up to Meerut near Delhi.<br><br>• He realized that it was difficult to rules south India from Delhi.<br><br>• Therefore, he attempt to shift the capital from Delhi to Devagiri in Maharashtra, which he named Daulatabad, was a bold initiative.<br><br>• However, the plan failed, Soon Muhammad realised that it was difficult to rule North India from Daulatabad.<br><br>• He again ordered transfer of capital back to Delhi. |
| முகமது பின் துக்ளக் டெல்லியிலிருந்து தௌலதாபாத்திற்கு தனது தலைநகரை மாற்றிய போது, டெல்லியிலிருந்த குடிமக்கள் அனைவரையும் இடம்பெயரச் செய்ததொடு, கால் நடைகளையும் இடம்பெயரச் செய்தார். | When Muhammad-bin-Tughluq moved his capital from Delhi to Daulatabad, he displaced all the citizens of Delhi and also the cattle. |
| சுல்தானுடன் டெல்லி திரும்பிய மொராக்கோ நாட்டுப் பயணியான இபன் பதூதா டெல்லியை அடைந்தபோது | When Ibn Battuta, the Morocco traveller who was with the Sultan, returned to Delhi, he found Delhi 'empty, abandoned and had but a small population'. |

| | |
|---|---|
| அது, காலியாக, கைவிடப்பட்டதாக ஆனால் குறைந்தளவு மக்களுடன் இருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார். | |
| **அடையாள நாணயங்கள்**<br><br>• இந்த நாணய முறை ஏற்கனவே சீனாவிலும் ஈரானிலும் நடைமுறையில் இருந்தது.<br><br>• இந்தியாவில் நாணயங்களின் மதிப்பு அதிலிருந்த வெள்ளி உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன.<br><br>• நாணயங்களோ, போதுமான அளவுக்கு புதிய நாணயங்களை வெளியிடும் அளவுக்கு வெள்ளியோ கைவசம்இல்லை என்பதை அறிந்துகொண்ட துக்ளக் செப்பு நாணயங்களை அடையாளப் பணமாக வெளியிட்டார்.<br><br>• செப்பு நாணயங்களைப் போலியாக அடிப்பது எளிதாயிருந்தது.<br><br>• வெகுவிரைவில் கள்ள நாணயங்கள் பெருகுவது அன்றாட நிகழ்ச்சியானது. இதன் விளைவாக ஒட்டு மொத்த வருவாய் நிர்வாகமுறை சீர்குலைந்தது. வெளிநாட்டு வணிகர்கள் வியாபாரத்தை நிறுத்தியதால் வணிகம் பாதிப்புக்குள்ளானது.<br><br>• சுல்தான் செப்பு நாணயங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு அதற்கு மாற்றாகத் தங்க, வெள்ளி நாணயங்களை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால் அரசு திவாலானது. | Token Currency<br><br>• This currency system had already been experi-mented in China and Iran.<br><br>• For India it was much ahead of its time, given that it was a time when coins were based on silver content.<br><br>• When he discovered that the stock of coins and silver was inadequate for minting, he issued a token currency in copper.<br><br>• Fake bronze coins were minted easily.<br><br>• Counterfeiting soon became order of the day and, as a result, the entire revenue system collapsed. Trade suffered as foreign merchants stopped business.<br><br>• This forced Sultan to withdraw the token currency and pay gold and silver coins in exchange. This move led the state to become bankrupt. |
| **நடவடிக்கைகள்:**<br><br>• தோவாய் சமவெளிப் பகுதியில் ஒரு நீண்டகாலக் கடும் பஞ்சம் ஏற்பட்டிருந்த நேரத்தில் இம்முயற்சி எடுக்கப்பட்டது.<br><br>• எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் கடுமையாக நடத்தப்பட்டனர். | Other Innovative Measures<br><br>• It coincided with a prolonged and severe famine in the Doab.<br><br>• The peasants who rebelled were harshly dealt with. |

| | |
|---|---|
| • வேளாண்மையைக் கவனித்துக்கொள்ள ஒரு தனித் துறையை (திவான்-இ-அமிர் கோஹி) சுல்தான் ஏற்படுத்தினார். | • The Sultan established a separate department (Diwon--Amir Kohi) to take care of agriculture. |
| • கால்நடைகளையும் விதைகளையும் வாங்க, கிணறுகள் வெட்ட விவசாயிகளுக்குக் கடன் தரப்பட்டது என்றாலும் இது பயன்தரவில்லை. | • Loans were advanced to farmers for purchase of cattle, seeds and digging of wells but to no avail. |
| • முகமது-பின்-துக்ளக் தான் வென்ற அனைத்து பகுதிகளையும் இணைத்துக்கொண்டார்.எனவே, அவரது இறுதி காலத்தில் அடுத்தடுத்து கிளர்ச்சிகளை சந்தித்தார். | • Muhammad annexed all the lands he conquered.Therefore, at the end of his reign, while he faced a series of rebellions. |
| • தொலைவில் உள்ள வங்காளம், மதுரை, வாராங்கல், அவுத், குஜராத் மற்றும் சிந்து போன்றவை கிளர்ச்சியில் ஈடுபட்டன. | • Distant regions like Bengal, Madurai, Warangal, Awadh, Gujarat & Sind hoisted the flags of rebellion. |
| • அவுத், முல்தான், சிந்து ஆகிய மாகாணங்களின் ஆளுநர்கள் சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து தங்களைச் சுதந்திர அரசர்களாகப் பிரகடனம் செய்து கொண்டனர். | • The Governors of Awadh, Multan and Sind revolted and declared themselves independent. |
| • தென்இந்தியாவில் பல புதிய அரசுகள் எழுச்சி பெற்றன. துக்ளக்கிடம் முன்னர் படைவீரராகப் பணியாற்றிய பாமினி என்பார் தெளலதாபாத்தையும் அதைச் சுற்றிக் கைப்பற்றப்பட்ட பகுதிகளையும் சுதந்திர அரசாக அறிவித்தார். அவரது பெயரிலேயே அது பாமினி சுல்தானியம் என அழைக்கப்பட்டது. | • In South India, several states arose. The new Daulatabad and the conquered territories around them were declared independent sultanate called Bahmani. Its founder after whom it was named, was a soldier formerly in Tughluq service. |
| • கி.பி.1335இல் மதுரை தனி சுல்தானியமாக உருவானது. 1346இல் வங்காளம் சுதந்திர அரசானது. | • Madurai was proclaimed a separate sultanate in 1335. Bengal became independent in 1346. |
| • கிளர்ச்சியாளர்களுடன் சண்டையிடுவதிலேயே முகமது தமது கடைசி நாட்களைக் கழித்தார். | • The Sultan spent his last days fighting rebels. |
| • குஜராத்தில் ஒரு கிளர்ச்சித் தலைவரை விரட்டிச் செல்வதில் ஈடுபட்டிருந்தபோது உடல்நலம் கெட்டு, தனது 26வது ஆட்சியாண்டில் 1351 மார்ச் 23இல் மரணமடைந்தார். | • While he was frantically engaged in pursuing a rebel leader in Gujarat, he fell ill, and died at the end of his 26th regnal year (1351). Tughluq died on 23 March 1351. |

| | |
|---|---|
| **ஃபெரோஸ் துக்ளக் (1351-1388)**<br>• பெரோஸின் தந்தை ரஜப், கியாசுதீன் துக்ளக்கின் தம்பி ஆவார். இருவருமே அலாவுதீன் கில்ஜியின் ஆட்சிக் காலத்தில் குரசனிலிருந்து வந்தவர்கள்.<br>• ரஜப், ஒரு ஜாட்இளவரசியை மணந்திருந்தார். ஃபெரோஸுக்கு ஏழு வயதான போதே அவர் இறந்துவிட்டார்.<br>• கியாசுதீன் ஆட்சிக்கு வந்தபோது, ஃபெரோஸை, 12,000 குதிரை வீரர்களைக் கொண்ட சிறப்புப் படைக்குத் தளபதியாக்கினார்.<br>**பிரபுக்களுடன் சமரசக் கொள்கை:**<br>• பிரபுக்கள் வகுப்பினரிடமும் மதத் தலைவர்களிடமும் ஃபெரோஸ் துக்ளக். சமரசக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.<br>• அலாவுதீன் ஆட்சியில் பறிக்கப்பட்ட சொத்துகள் மீண்டும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டன.<br>• முகமது-பின்-துக்ளக் ஆதரிக்காத ஒரு நடைமுறையான, அலுவலர்களைப் பரம்பரைபரையாகப் பணியமர்த்துகிற முறையைஃபெரோஸ் மீண்டும் அறிமுகப்படுத்தினார்.<br>• அடிமைகள் குறித்து ஃபெரோஸுக்கு ஒருமெய்யான அக்கறை இருந்தது. அவர்களது நலன்களைக் கவனிப்பதற்காகத் தனியே ஓர் அரசுத் துறையை ஏற்படுத்தினார்.<br>• 1,80,000 அடிமைகளின் நல்வாழ்க்கையில் அடிமைகள் நலத்துறை அக்கறை செலுத்தியது.<br>• கைவினைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு. அரசாங்கத்தின் தொழில்கூடங்களில் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர். | • Firuz Tughlaq (1351 - 1388)<br>• Firuz's father, Rajab, was the younger brother of Ghiyas-ud-din Tughlaq.Both had come from Khurasan during the reign of Alauddin Khalji.<br>• Rajab who had married a Jat princess had died when Firuz was seven years old.<br>• When Ghiyas-ud-din ascended the throne, he gave Firuz command of a 12,000 strong cavalry force.<br>**Conciliatory Policy towards Nobles**<br>• Firuz Tughlaq followed a conciliatory policy towards the nobles and theologians.<br>• Firuz restored the property of the owners who had been deprived of it during the reign of Muhammad Tughlaq.<br>• He reintroduced the system of hereditary appoint-ments to offices, a practice which was not favoured by Ala-ud-din Khalji.<br>• Firuz had a genuine concern for the slaves and established a separate government department to attend to their welfare.<br>• The slave department took care of the wellbeing of 1,80,000 slaves.<br>• They were trained in handicrafts and employed in the royal workshops. |

| | |
|---|---|
| **போர்கள் வேண்டாம் என்ற ஃபெரோஸின் கொள்கை**<br>• ஃபெரோஸ் துக்ளக், போர்கள் எதுவும் தொடுக்கவில்லை.<br>• இருப்பினும், கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அவரது வங்கப் படையெடுப்பு ஒரு விதி விலக்காகும்.<br>• அவரது காலத்திய ஒரே பெரிய இராணுவப் படையெடுப்பு சிந்துவின் மீது தொடுக்கப்பட்டதாகும் (1362).எதிரிகளை வாயிலிலேயே நிலைகுலைய வைத்து ஃபெரோஸ் வெற்றிபெற்றார். | **Firuz Policy of No Wars**<br>• Firuz waged no wars<br>• though he was not averse to putting down rebellions challenging his authority<br>• A major military campaign of his period was against Sind (1362).He succeeded in routing the enemies on the way. |
| மதக்கொள்கை<br>• வைதீக இஸ்லாமை ஃபெரோஸ் ஆதரித்தார். மதத் தலைவர்களை மன நிறைவுச் செய்வதற்காக தமது (அரசை இஸ்லாமிய அரசாக அறிவித்தார்.<br>• இஸ்லாமியர் அல்லாதவருக்கு ஜிஸியா எனும் வரியை விதித்தார்.பிராமணர்களும் அதைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர்.<br>• இருப்பினும் புதிய இந்துக் கோயில்கள் கட்டுவதை ஃபெரோஸ் தடை செய்யவில்லை. | **Religious Policy**<br>• Firuz favoured orthodox Islam. He proclaimed his state to be an Islamic state largely to satisfy the theologians<br>• He imposed jizya, a head tax on non-Muslims, even the Brahmins were compelled to pay.<br>• Yet Firuz did not prohibit the building of new Hindu temples and shrines. |
| பொதுப் பணிகள்<br>• பல பாசனத் திட்டங்களை ஃபெரோஸ் மேற்கொண்டார்.<br>• சட்லெஜ் நதியிலிருந்து ஹன்ஸிக்கு வெட்டிய கால்வாயும் யமுனையில் வெட்டிய மற்றொரு கால்வாயும் அவரது வலுவான பொதுப்பணி வளர்ச்சிக் கொள்கையை வெளிப்படுத்தகின்றன. | Public Works<br>• Firuz undertook many irrigation projects.<br>• A canal he dug from Sutlej river to Hansi and an-other canal in Jumna indicate his sound policy of public works development. |

| | |
|---|---|
| வரிவிதிப்பு<br><br>• மக்களிடையே நான்கு விதமான வரிகளை வசூலித்தார்.<br><br>1. கரோஜ் - விளைச்சலில் 1/10 பங்கு -<br><br>2. கம்ஸ்-போர்களில் கைப்பற்றிய பொருட்களில் 1/5 பங்கு<br><br>3. ஜிஸியா - தலைவரி<br><br>4. ஜகாத் - குறிப்பிட்ட இஸ்லாமிய மதச் சடங்குகளைச் செய்வதற்கு வசூலிக்கப்படும் கட்டணம். | Imposing Taxes<br><br>• He collected four important taxes<br><br>1. Kharaj - 1/10 of the produce of the land<br><br>2. Khams - 1/5 of the war booty<br><br>3. Jiziya Poll tax<br><br>4. Zakat Tax on muslims for specific religious purposes. |
| ஜிஸியா<br><br>• ஜிஸியா என்பது இஸ்லாமிய அரசுகளால் அவர்களின் நிலத்தில் வாழும் இஸ்லாமியர் அல்லாத குடிமக்களின் தலைக்கு இவ்வளவு என விதித்து வசூலிக்கப்பட்ட ஒரு வரியாகும்.இதன் மூலம் அவர்கள் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன.<br><br>• இந்தியாவில் முதன்முறையாக இஸ்லாமியர் அல்லாதார் மீது ஜிஸியா விதித்தவர் குத்புதீன் ஐபக்.<br><br>• முகலாய அரசர் அக்பர், பதினாறாம் நூற்றாண்டில் ஜிஸியாவை ஒழித்தவர் என்றாலும், பதினேழாம் நூற்றாண்டில் ஔரங்கசீப் அவ்வரியை மீண்டும் அறிமுகப்படுத்தினார். | Jizya<br><br>• Jizya is a tax levied and collected per head by Islamic states on non-Muslim subjects living in their land.By this way their rights were guaranteed.<br><br>• In India, Qutb-ud-din Aibak imposed jizya on non-Muslims for the first time.<br><br>• Jizya was abolished by the Mughal ruler Akbar in 16th century but was re-introduced by Au-rangzeb in the 17th century |
| • பிரோஷவால் கிளர்ச்சிகளை அடக்கவும் இயலவில்லை; பிரிந்துசென்ற மாகாணங்களை மீட்கவும் முடியவில்லை. தென்பகுதி மாகாணங்களை மீண்டும் கைப்பற்றுவதிலும் அவர் ஆர்வம் காட்டவில்லை.<br>• தக்காணப் பிரச்சனைகளில் தலையிட வேண்டும் எனக் கேட்டுப் (ஏறத்தாழ 1365) பாமினி இளவரசர் விடுத்த அழைப்பையும் அவர் ஏற்க மறுத்துவிட்டார். | • Firoz could neither suppress revolts nor win back the provinces that had broken away. He also showed no interest in re-conquering the southern provinces.<br><br>• He refused to accept an invitation (c. 1365) from a Bahmani prince to intervene in the affairs of the Deccan. |

| | |
|---|---|
| • சூபி ஞானிகளுக்கும் ஏனைய மதத் தலைவர்களுக்கும் பிரோஷ் தாராளமனதுடன் பரிசுகள் வழங்கி கௌரவித்து அவர்களின் அறிவுரைகளுக்குச் செவிமடுத்தார்.<br>• ஏழை முஸ்லீம்களுக்கு உதவுவதற்கான அறக்கட்டளைகளை நிறுவினார்.<br>• கல்லூரிகள், மருத்துவமனைகள், மசூதிகள் ஆகியவற்றைக் கட்டினார்.<br>• பல மனிதாபிமான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார்.<br>• மனிதாபிமானமற்ற, கொடூரமான தண்டனைகளை ஒழித்தார்.<br>• இஸ்லாமியச் சட்டங்களால் அங்கீகரிக்கப்படாத வரிகளை ரத்து செய்தார்.<br>• விவசாயிகளின் கடன்களை ரத்து செய்தும் பல நீர்ப்பாசனக் கால்வாய்களை வெட்டியும் வேளாண்மையை மேம்படுத்தினார்.<br>• 1200புதிய தோட்டங்களை உருவாக்கிய அவர் அலாவுதீன் கில்ஜியின் காலத்தைச் சேர்ந்த 30 பழைய தோட்டங்களைப் புனரமைத்தார்.<br>• பிரோஷாபாத், ஜான்பூர், ஹிசார், பிரோஷ்பூர் ஆகிய புதிய நகரங்களையும் அவர் நிர்மாணித்தார்.<br>• சுல்தானியத்தைக் கட்டிக்காக்க அமைதியான முறையில் பல முயற்சிகளை அவர் மேற்கொண்டார். இருந்தபோதிலும் பிரோஷா துக்ளக்கின் இறுதி நாட்கள் மகிழ்ச்சி நிறைந்தவையாக இல்லை.<br>• அவருடைய மகன் முகமதுகான் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்.<br>• 1388இல் தனது 83 ஆவது வயதில் பிரோஷ் ஷா துக்ளக் இயற்கை எய்தினார். | • Firoz rewarded Sufis and other religious leaders generously and listened to their advice.<br>• He also created charities to aid poor Muslims, built colleges, mosques, and hospitals.<br>• He adopted many humanitarian measures.<br>• He banned inhuman punishments and abolished taxes not recognised by Muslim law.<br>• He promoted agriculture by waiving off the debts of the agriculturalists and constructing many canals for irrigation.<br>• He laid out 1200 new gardens and restored 30 old gardens of Alaud-din-Khalji.<br>• He had built new towns such as Firozabad, Jaunpur, Hissar and Firozpur.<br>• Despite adopting a peaceful approach and taking efforts to organise the Sultanate well, he had to spend his last days in unhappiness.<br>• His own son Muhammad Khan revolted against him and Firoz Shah died in September 1388, at the age of 83. |
| **<u>தைமூரின் படையெடுப்பு (பொ.ஆ.1398)</u>**<br>• பிரோஷ் ஷா பத்தாண்டுகள் துக்ளக் மரணமுற்று கழிந்த நிலையில் "தாமர்லைன்" என்றழைக்கப்பட்ட தைமூர் டெல்லியைத் தாக்கிச் சூறையாடி மாபெரும் மனிதப் | Timur's Invasion (C.E.1398)<br>• The sacking and massacre by Tamerlane or Timur of Delhi came a decade after Firuz Shah Tughluq died |

| | |
|---|---|
| படுகொலையை அரங்கேற்றினார்.<br>• கடைசி துக்ளக் அரசர் நசுருதீன் முகமது ஷா (1394-1414) இவரது ஆட்சியின் போதுதான் மத்திய ஆசியாவிலிருந்து தைமூரின் படையெடுப்பு நிகழ்ந்தது.<br>• இந்தியாவின் வலிமையின்மையைச் சாதகமாக்கிக்கொண்டு இந்தியாவிற்குள் படையெடுத்து நுழைந்து 1398 டிசம்பர் மாதத்தில் டெல்லியைக் கொள்ளையடித்தார்.<br>• தைமூர் தில்லியைச் சூறையாடினார். தைமூர் வந்து சேர்ந்த செய்தியைக் கேட்ட கல்தான் நசுருதீன் தில்லியை விட்டுத் தப்பி ஓடிவிட்டார்.<br>• கொல்லர்,கல்தச்சர்,தச்சர்போன்ற இந்தியகைவினைஞர்-களைச் சிறைபிடித்துச் சென்ற தைமூர், தனது தலைநகர் சாமர்கண்டில் கட்டடங்களை எழுப்புவதில் அவர்களை ஈடுபடுத்தினார்.<br>• தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்ததாக அதிகம் பாதிப்புக்கு உள்ளான பகுதி பஞ்சாப் ஆகும். | • The last Tughlaq ruler was Nasir-ud-din Muham-mad Shah (1394-1414), whose reign witnessed the invasion of Timur from Central Asia.<br>• Taking advantage of India's weakness, he entered India in December 1398 and plundered Delhi.<br>• Delhi was ruined by Timur. On hearing the news of arrival of Timur, Sultan Nasir-ud-din fled Delhi.<br>• Timur also took Indian artisans such as masons, stone cutters, carpenters whom he engaged for raising buildings in his capital Samarkhand.<br>• Punjab, besides the Delhi city, was the province that suffered most by Timur's raid |
| **சையது வம்சம்** | **The Sayyid Dynasty** |
| சையது வம்சம் இந்திய வரலாற்றில் முக்கியமான ஒரு முஸ்லிம் அரச வம்சமாகும். இது டெல்லி சுல்தானியத்தின் நான்காவது வம்சமாகும். சையது வம்சம் கி.பி. 1414 முதல் 1451 வரை டெல்லியை ஆட்சி செய்தது.<br><br>இந்த வம்சத்தை நிறுவியவர் **கிசர் கான் (Khizr Khan)** ஆவார். திமூரின் (Timur) படையெடுப்பிற்குப் பிறகு டெல்லியில் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தை பயன்படுத்தி கிசர் கான் ஆட்சியை கைப்பற்றினார். அவர் தன்னை "சுல்தான்" என்று அறிவிக்காமல், திமூரின் பிரதிநிதியாக ஆட்சி செய்தார்.<br><br>சையது வம்சத்தின் முக்கிய அரசர்கள்: | The Sayyid Dynasty was an important Muslim ruling dynasty in Indian history. It was the fourth dynasty of the Delhi Sultanate and ruled from **1414 CE to 1451 CE**.<br><br>The dynasty was founded by **Khizr Khan**, who came to power after the invasion of Timur. He took control of Delhi during a period of political instability. Khizr Khan did not declare himself a Sultan; instead, he ruled as a representative of Timur.<br><br>The main rulers of the Sayyid Dynasty were:<br><br>1. Khizr Khan<br>2. Muhammad Shah |

| | |
|---|---|
| 1. கிசர் கான்<br>2. முகம்மது ஷா<br>3. அலாவுதீன் ஆலம் ஷா<br><br>இந்த காலகட்டத்தில் டெல்லி சுல்தானியம் மிகவும் பலவீனமாக இருந்தது. பொருளாதார வீழ்ச்சி, கிளர்ச்சிகள் மற்றும் மாகாண ஆளுநர்களின் தன்னாட்சி காரணமாக மைய ஆட்சி வலிமை குறைந்தது. சையது அரசர்கள் பெரும்பாலும் டெல்லி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளையே கட்டுப்படுத்த முடிந்தது.<br><br>இறுதியில், கடைசி அரசர் **அலாவுதீன் ஆலம் ஷா** தன்னிச்சையாக ஆட்சியை விட்டு விலகினார். இதன் பின்னர் **லோடி வம்சம்** டெல்லி சுல்தானியத்தில் ஆட்சியைத் தொடங்கியது.<br><br>சையது வம்சம் குறுகிய காலம் மட்டுமே ஆட்சி செய்தாலும், திமூரிய படையெடுப்பிற்குப் பிறகு ஏற்பட்ட மாற்றக் காலத்தை பிரதிபலிக்கும் முக்கியமான வம்சமாகும். | 3. Ala-ud-Din Alam Shah<br><br>During the rule of the Sayyid Dynasty, the Delhi Sultanate was very weak. The central authority had little control over the provinces. Economic decline, rebellions, and the independence of regional governors weakened the administration. The rulers mainly controlled Delhi and nearby areas.<br><br>The last ruler, **Ala-ud-Din Alam Shah**, voluntarily gave up the throne. After this, the **Lodi Dynasty** came to power in Delhi.<br><br>Although the Sayyid Dynasty ruled for a short period, it played a significant role during the transitional phase after Timur's invasion and before the rise of the Lodi rulers. |
| | |
| **சையது வம்சம் (1414-1451)**<br><br>• டெல்லி சுல்தானியம் பல சுதந்திர அரசுகளாகச் சிதறுண்டுபோனாலும் முகலாயர் படையெடுப்புவரை 114 ஆண்டுகள் தாக்குப்பிடித்து நின்றது.<br>• டெல்லியை விட்டுச் செல்வதற்கு முன்பாகத் தைமூர் தான் கைப்பற்றிய பகுதிகளுக்கு (டெல்லி, மீரட், பஞ்சாப் (சிர்கிந்த்)) கிசிர்கான் என்ற தனது பிரதிநிதியை ஆளுநராக நியமித்துச்சென்றார். அவர் 1414இல் சையது அரச வம்சத்தைத் தோன்றுவித்தார். அவ்வரச வம்சம் 1451 வரை நீடித்தது.<br><br>• பஞ்சாப் போர் அணிவகுப்புகளில் தன் நலன்களை மேற்பார்வை பார்ப்பதற்கு கிசர் கானைத் தனது துணையாக நியமித்தார் தைமூர். | • Though the Sultanate fragmented into a number of independent kingdoms, it endured for 114 years more, till the Mughal invasion.<br>• Before leaving Delhi, Timur had left behind his representative Khizr Khan as the governor of the territories he had conquered (Delhi, Meerut and Punjab).<br>• He founded the Sayyid Dynasty in 1414, which lasted till 1451.<br><br>• Timur appointed Khizr Khan as his deputy to oversee Timurid interests in the Punjab marches.<br>• Khizr Khan (1414-21) went on to seize Delhi and establish the Sayyid dynasty (1414–51).<br>• The Sayyid dynasty established by Khizr Khan had four sultans ruling up to |

| | |
|---|---|
| • கிசர் கான் (1414-1421) தானே சென்று தில்லியைக் கைப்பற்றி சையது வம்ச ஆட்சியை நிறுவினார்.<br>• கிசர் கான் நிறுவிய சையது வம்சத்தில், 1451 வரையிலும் நான்கு சுல்தான்கள் ஆண்டனர்.<br>• முற்பட்ட சையது சுல்தான்கள், தைமூரின் மகனுக்குத் திறை செலுத்தி ஆட்சி புரிந்தனர்.<br>• அவர்களின் ஆட்சியை, யாஹியா-பின்-அஹ்மத் சிரிந்தி இயற்றிய தாரிக்-இ-முபாரக்-சாஹி குறிப்பிடுகிறது.<br>• அவர்களது ஆட்சியின் இறுதியில், பேரரசு தில்லி நகரத்துக்குள் சுருங்கி விட்டது.<br>• அவ்வம்சத்தின் கடைசி சுல்தான் அலாவுதீன் ஆலம் ஷா 1451இல் அரச பதவியைத் துறந்தார்.<br>• தில்லி சுல்தானிய ஆட்சியின் ஒட்டுமொத்த வரலாற்றில் ஆட்சி உரிமையைத் தாமாகவே துறந்து, தில்லிக்கு வெளியே ஒரு சிறிய நகருக்குச் சென்று, முழுமையாக முப்பது ஆண்டுகள் மனநிறைவோடும் அமைதியாகவும் வாழ்ந்த ஒரே சுல்தான் சய்யித் வம்சத்தில் வந்த ஆலம் ஷா<br>- Abraham Eraly, The Age of Wrath.<br>• இது சிர்ஹிந்த் (பஞ்சாப்) பகுதியின் ஆளுநராக இருந்த பகலூல் லோடிக்கு டெல்லியின் சுல்தானாகும் வாய்ப்பினை வழங்கியது. அவரே லோடி வம்ச ஆட்சியைத் தோற்றுவித்தார். | 1451.<br>• The early Sayyid Sultans ruled paying tribute to Timur's son.<br>• Their rule is marked for the composing of Tarikh-iMubarak Shahi by Yahiya bin Ahmad Sirhindi.<br>• By the end of their rule the empire was largely confined to the city of Delhi.<br>• The last ruler of this dynasty, Ala-ud-din Alam Shah, abdicated the throne in 1451.<br>• In the entire history of the Delhi Sultanate there was only one Sultan who voluntarily abdicated his throne and moved to a small town away from Delhi, where he lived for three full decades in contentment and peace. He was Alam Shah of the Sayyid dynasty.<br>– Abraham Eraly, The Age of Wrath.<br>• This gave Bahlol Lodi, then the governor of Sirhind (Punjab), the opportunity to become the new Sultan of Delhi, leading to the establishment of Lodi dynasty. |
| **லோடி வம்சம்** | |
| **லோடி வம்சம்(1451 – 1526) -**<br>• 1489இல் பகலூல் லோடியைத் தொடர்ந்து அவரது மகன் சிக்கந்தர் லோடி சுல்தானாகப் பொறுப்பேற்றார். அவர் கலைகளையும் கல்வியையும் ஆதரித்தார்.<br>• ஆக்ரா நகரை நிர்மாணித்த அவர் அந்நகரைத் தலைநகர் ஆக்கினார். அவர் 1517இல் மரணமுற்றதைத் தொடர்ந்து அவருடைய மகன் இப்ராகிம் லோடி அரசப் பதவியேற்றார்.<br>• இப்ராகிம் லோடி பாபரால் 1526இல் பானிபட் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார்.<br>• இவ்வாறு லோடி அரச வம்சத்திற்கும் டெல்லி | • Lodi Dynasty (1451 - 1526) In 1489, Bahlol Lodi was succeeded by his son Sikandar Lodi.<br>• Sikandar was a patron of arts and learning. He founded the city of Agra and made it his capital. He died in 1517 and was succeeded by his son, Ibrahim Lodi.<br>• Ibrahim Lodi was defeated by Babur in 1526 in the Panipat battle.<br>• Thus the Lodi dynasty and the Delhi Sultanate were ended by Babur who went on to establish the Mughal Empire in India |

| | |
|---|---|
| சுல்தானியத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்த பாபர் முகலாயப் பேரரசை நிறுவினார்.<br><br>11-ம் வகுப்பு<br><br>• லோடி வம்ச ஆட்சியை நிறுவியவர் பஹ்லுல் லோடி ஆவார்.<br>• இவரது ஆட்சியின்போது வங்கத்தில் ஆட்சி புரிந்த ஷார்கி அரசு கைப்பற்றப்பட்டது.<br>• இவரது மகன் சிக்கந்தர் லோடி (1489-1517) 1504இல் தலைநகரை தில்லியிலிருந்து ஆக்ராவுக்கு மாற்றினார்.<br>• கடைசி லோடி ஆட்சியாளரான இப்ராஹிம் லோடி, முகலாய வம்ச ஆட்சியை நிறுவிய முதலாம் பானிபட் போரில் (1526) பாபரிடம் தோற்றார். | 11th std<br><br>• The Lodi Dynasty was established by Bahlul Lodi ( 1 4 5 1 – 1 4 8 9 )<br>• whose reign witnessed the conquest of Sharqi Kingdom (Bengal).<br>• It was his son Sikander Lodi (1489– 1517) who shifted the capital from Delhi to Agra in 1504.<br>• The last Lodi ruler Ibrahim Lodi was defeated by Babur in the First Battle of Panipat (1526), which resulted in the establishment of Mughal Dynasty. |
| | • |